656

கருணாலயன்

இதில்

உலக ரக்ஷகர் திருவாய்மலர்ந்தருளிய போதனைகளுள்
நல்ல சமாரித்தன் உவமையின் கருத்தை
இந்தியர்களுக்கு விளங்குமாறு அமைத்
திருக்கும் பாடல்களுள்ளன

"நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு
நான் என்னசெய்யவேண்டும்"

முதற்பதிப்பு 1,000

திருநெல்வேலி
எஸ். பி. ஜி. சுவிசேஷப் பிரசங்கக் கூட்டத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது.

PALAMCOTTAH
PRINTED AT THE CHURCH MISSION PRESS

1912.

விலை அணா 2.

All right reserved.

656/1 1206
Q6:417 N12
146978

அளவடி வஞ்சி விருத்தம்.

கருணாலய நாயக னெங் கதி
அருணாதர் திருநாம மே மதி
மருணாசரவர் பதமே துதி
வருநாச மணுகாது உம் பதி

கருணாலயன்

பாயிரம்

இந்தியா தேசத்திருக்கும் ஜனங்கள்
சிந்தியாதுபல் தேவரநேகரை
வந்தித்துப்பவ வழிகளிலலைந்து
எந்தை பரனை எள்ளளவாயினுஞ்
சிந்தை செயாது திரிகின்றாரஃதால்
நிந்தையுறுவது நிச்சயமெனவறிந்
தெம்மையாட் கொண்ட விறைவன் சற்குரு
அம்மையின் மேலாம் அன்புடை மூர்த்தி
முன்னைநாள் நரர்க்காய் முகித்த ரட்சிப்பை
நன்னர் பெருக நவிலுஞ் சாட்சியாய்ப்
பாவினமாகப் பகரவுன்னினேன்
பாவலர் பொறுப்பீர் பாலன் மொழியென
சத்திய வழியைச் சரித்திரப்பாவாய்
பத்தியுடையோர் பாகதி பெறவே
*தத்தியமாக †கத்தியம்போல
நித்தியஜீவ நிலைமையுதிக்க
கத்தியமொழியைக் கருத்துள் வைக்கில்
சுத்த மெய்ஞ்ஞானந்திகழும் நிச்சயமே.

பாயிரம் முற்றிற்று.

வேண்பா

1 அருணை நயனே அரசே வரந்தரவா
கருணை லயன் காதைகழற—தருணம்
வருவா யுணவிவரந் தருவாய் எமது குல
குருவா யெழுமெனெழுந்து கூர்.

---

* தத்தியம்=மெய்.
† கத்தியம்=இலக்கணமின்றி இலக்கணப்பாட்டுப் பாடுவது.

2 எல்லாரு முய்ய விவண்மனு வாயுதித்த
வல்லோன் கிறிஸ்து வழுத்தினதோர்—நல்லசமா
ரித்தனெனு முவமை இன்புடனான் பாடுதற்கு
இத்திதியருள் தரவே வா.

ஆசிரிய விருத்தம்

அருள்பரனறை சுருதியதில் வருகின்ற கரு
ணலயன் சரிதை பாடி
அனைவோரும் அன்புட னாயந்தறிந்தத் தன்
அடிக் கமலம் அண்டுதற்கு
இருளலகையிடரகல யிப்புவியி லேசுவெனு
மிரட்சக ரிறங்கிவந்து
இதோபதேசம் புரிந் தீனமாய்ச் சிலுவையி
லிறந்துவுயிர்த்தெழுந்து
மருளறவே மானிடரின் மதிவிளக்கு மறையெங்கும்
மலக்காமல் மைந்தர்
மகிழ்ந்துணாக்கும்படி புகன்று முகிலேறியே பர
மண்டலமீது சென்று
பருதியொளி முடிசூடி பாமர் வலபாகமெய்தி
பரிசுத்தாவியை நரர்க்குப்
பகிர்ந்துதவு பாவபரிகாரனிரு பாதமலர்
பரிவுடனே பணிகுவோமே.

விருத்தம்

மன்னவனும் ஜீவமொழி கனிவாயான் மாற்றலனை
வென்றகோமான்
பொன்னகரோன் புனிதர் மனத்துறைகின்றோன்
புகழாளன் பூமான்
தன்னிகரொன்றில்லாதான் நமரிலான் குறமிலான்
கிறிஸ்துபெம்மான்
என்னுயிருக்குயிரான வீசனைப் பாமாலையினு
விளம்புவேனே.

ரககாப்பக

அவையடக்கம்

விருத்தம்

1 தாசனோர்வன் றனியாய் சாலேம்நின் றெரிகோப்போங்கால்
தூசுறிந்தடித்துச்சோரர் துவைத்துயிர் கிடத்திப்போனார்
ஆசாரியோர்வன்றானவ்வயண் வறிந்தகன்றானங்கோர்
காசி லேவியனும் போனான் கடையொரு சமார்யன்கண்டு.

2 பாங்குடனுருகிக்காயம் படியநெய்ரசம்வார்த்தார்த்துத்
தாங்கியூர்தியில்வைத்தேகி தரித்தொருமடத்திற்பின்னா
லாங்குளமடத்தான்கையில் அளிபணம்ரண்டீந்தோம்பாய்
ஈங்கிவன்பொருட்டுச்சென்றாலுதவுவன் வருநாளென்றான்.

கலிவிருத்தம்

ஒளிநிறையுலகினொண் பெருமைநீத்
தழிகொண்மானிட வுருவைக்காட்டியிங்
கெளிதின்ரட்சணிய முவந்தெமக்கரு
ளளிமலர்ப்பதத்தையனை யேற்றுவாம்.

1

திரித்வ வணக்கம்

காம்போதி ஆதிதாளம்.

பல்லவி

வரவேண்டுமே—திரித்துவ தேவா
வரவேண்டுமே—சிறியேனகமே.

அநுபல்லவி

தரவேண்டுமே உத்தனாவியை
வரம்வேண்டுமே பதம்பாடவே— வர.

1 மூவர்முதல்வா முதற்பொருளே
காவாநின்றாசர் கணம்நடுவே— வர.

2 கன்னிபாலுதித்த கருணாகரா
அன்னைவினைதீர்த்த அருளாவதாரா— வர.

3 அன்பின்சொரூபா ஆன்மகாதலா
இன்பகிருபா விறையே நலா— வர.

4 சித்சபையின் தேற்றரவாளா
வித்தகாவிமலா சுத்தஆவிதா— வர.

5 பக்திதாசரின் சித்தநேசனே
சக்தியருள்வா சருவேசனே— வர.

---

2 குமாரதுதி

ஹிந்துஸ்தான் கமாஸ் ஆதிதாளம்.

தரு.

1 ஸ்ரீ கிறிஸ்து தேவனே நமோ நமோ
சிறுவனுனது திருவடிபணிந் திருகரங்குவித்தேன்
தேவா வா வா திருவருள்புரிவா.

2 உலகிலுன்போல் தெய்வம் வேறில்லை இல்லை
உலகுளோர்துதி வலபரன்சுதா நலசமயங்கண்பார்
யோகா தியாகா உனதவைபோகா.

3 தாசனின்றியற்றும் செந்தமிழினில்
தளைசீரடியில் பிழையனுவேனும் நுழையாதருள்புரி
தாளை ஏழை தனக்கீயிவ்வேளை.

4 முத்தர்கள்துதி மூர்த்தியானவா நமோ
மோசனைவென்ற பாசனே ஸ்வாமிதாசனைக்கண்பார்
மோனு கியானு மறை நிறைவுறு ஞானு.

கந்னுலயன்

1-ம் பரிச்சேதம். யாத்திராரம்பபாகம்.

3 ஜீவாத்மன் பிரஸ்தாபம்

கல்யாணி திரிபுடை.

பல்லவி

அதிரூபலாவண்ய மான ஜீவாத்மனைப்போல்
அகிலமெங்கும் காணேனே.

அநுபல்லவி

கதியுலா விடுந்தூத கணங்கள்சங்கம் விநோத
சுதிமீட்டிடும் நாத சுரமண்டலகீத
துதிக்குப்பாத்திரன் கதிக்கிறையவன்
பதிக்குரிகரென வுதிக்கும்பருதியின்
விதிக்குமேலென மிதிக்குங்களிமணில்
மதிக்குமான்மபகுத் தறிவிலமைத்தனன் — அதி.

சரணங்கள்

1 ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை
நான்குவரங்களுடையோன்
ஆனதேவசாயலாய் அமைக்கப்பெற்றோனையன்
அருளனுதினஞ் சுகிப்போன்
கானம்பரவுமேதேன் காவினலத்தை நீடு
காலமனுபவிப்பவன்
வானமகன்றபுவி மகிலமைக்கரசனுக
ஞானம்நிறைபரனுல் ஞாலத்தில் தோன்றினவன்
தானவரர்சுரர் கானஇசைமலி
வானபரனெனும் ஞானஇரவியா
லானதரணியில் மேன்மையுடையனு
யூனுடம்பெடு நீனமனுடனும்— அதி.

2 அஞ்சுங்கரியகூந்தல் கொஞ்சுந்தண்மலரெனத்
தங்கும் ரீங்காரவண்டுகள்
நஞ்சுமொப்பனச்சொல்லல் கொஞ்சமாகிலுமல்ல
நளினவிருகண்மணிகள்
பஞ்சினிலுமெல்லிய அஞ்சொல்சிவந்தமேனி
கஞ்சமலர்க்கரங்கால்கள்
கிஞ்சுகங்குயிலோசை ரஞ்சிதக்குரல்நாதம்
குஞ்சரத்திலும்பெலன் மிஞ்சுங்காத்திரதேகம்
தங்கும்யாக்கையின் சங்கையும்
பொங்கும்சுத்த குணங்களும்
தின்கும்ஜீவ கனித்திரள்களும்
அங்கவன்ஸ்திதி நேர்த்தியாம்— அதி.

3 பூங்காவிலேவையெனும் பெண்ணோடு ஜீவாத்மன்
பெருமித வாழ்வையடைந்தான்
பூங்காரம் கொண்டுதிரி கின்ற பொய்யனாலிரு
பேரும் பெருந்தாழ்வடைந்தார்
ஆங்காரம்கொண்டுமையன் அதிகத்தயவுடன் செய்
அனுக்ரக வாக்குமடைந்தான்
சாங்காலம் வியாதி துன்பம் தாங்கொணுப் பவப்பாரம்
ஓங்கும் நரகோபாதி உக்ர தண்டனை யாதி
சாங்கோபாங்கமாய்த் தனையனங்கத்தை
ஓங்கும் நீதியின் கட்க வீச்சுக்கு
நீங்கவும் நீதி யோங்கவும் தயை
தாங்கவும் பரன் வாக்கையும் பெற்றான்— அதி.

4 காவில் விளைந்த பாவக் கன்ம விஷ மகலக்
கர்த்தன் பெத்தலை யடுத்தான்
பூவில் மனுடகோடிப் புண்யமடைந்து பதி
புகவே யவ்வுருவெடுத்தான்
ஏவையின் பாவத்தா லிழந்துபோன பாக்யம்
எல்லாம் நன்றாகக் கொடுத்தான்
பாவகாரணனை பசாசின் சிரத்தை வெட்டி
மேவும் பரமவாழ்வை மேதினியோர்க்கருள
வந்தும் பவத்தைச் சுமந்தும் திருவுடல்
நொந்தும் பூவில்விழுந்தும் சிலுவையிலி
றந்தும் மூன்றிலெழுந்தும் விண்ணிலு
யர்ந்து மிவனுக்காய் பரிந்துமிருப்பதால்— அதி.

---

4 ஜீவாத்மன் நாசதேசத்தியல்பை யறிந்திரங்குதல்

தேசிகதோடி ஆதிதாளம்

பல்லவி

அநேகவை போகமோ காதிசுக சோக
லோகம நித்தியமே—மே லோகம்
சதா நித்யமே.

அனுபல்லவி

கனகாபிஷேகம் கனவதிகாரம்
கனமுந் தனமு மினமும் பெறினும் பொய்
லோகம் அநித்தியமே— அநேக.

1 மானிடர் யாவரு மகிதலமாக வெம்
மாதவனே வணங்தார்—இந்த
நானிலரிடறி கன்றியற்றோரானர்
நாதனுமே சடைந்தார்-- அநேக

2 பிறக்கும் பாலியம் சிறக்கும் வாலிபம்
இறக்கும் முதுமை சன்னை—இதோ
பறக்கும் நற்செல்வந் துறக்குமுறவோர்
மறக்கும் பெண்டீர்கள் பிள்ளை— அநேக.

3 சகல பாவமும் சகல சாபமும்
திகழு மகிலமிதே—எல்லாம்
அகலக் கவலை கொள்வ துலகோர்க்குவேலை வீண்
புகல்வோரடைவர் தீதே— அநேக.

4 அழிவோனிறைபதி அழிவோருறைபதி
அழியுமெனச் சுருதி—விதி
அறைகின்ற முறைநின்று ஆராய்ந்தறிவதே
அறிவோர் தமக்குமதி அநேக.

---

5 நாசதேசத்தினது தலைநகரியாகிய மாயாபுரியின் வைபவங்களை ஜீவாத்மன் நினைந்து வெறுப்புறல்

செஞ்சுருட்டி ரூபகதாளம்

பல்லவி

மா...யாபுரி தஞ்சமென்றே—மயங்
கா திரு யென்னெஞ்சே

அநுபல்லவி

பாவியர்வாழ் பாழ் பதியாம்
தாவியே நீங் குதல் மதியாம்— மா.

1 நாசதேசத்தின் ராஜதானி—இதில்
நண்ணும் பவவினை பண்ணு மாயாபுரி
நாசதேசத்தின் ராஜதானி
பாச வெவ்வினை யாவுமுறைவிடம்
பாழலகையதி காரஞ் செய்யுமிடம்
தாசனையுமோசஞ் சாரும் பவவிடம்
வாசம் புரிவதுவே மடம் நேசம் பிரிவது வேதிடம்.

2 காரிருளோங்குந் தலமிதுவே—இந்தப்
பாரில் வருமரண காரணமு மானபவ
காரிருளோங்குந் தலமிதுவே
ஆரிருந்தும் அறுதிக்கு வுதவாது
பாரி மகவனை பாரில் பின்பற்றாது
தேரிலிது கந்தத் தீக்கினாயப்போது
தேவமறையோதுந் தீர்க்கந் தவறாது.

3. துன்பம் நோய் மரணம் வருமே—தூய
வின்பம் தராதீசன் அன்பைவளராதுலக
துன்பம் நோய் மரணம் வருமே.
கண்களினிச்சையுங் காமியச்சுவையும்
பெண்களினாரவாரத் திறைச்சலும்
சங்கட பஞ்சமா பாதகக் கொள்ளையும்
எங்குந் தொடர்ந்து நரரைப் பங்கப்படுத்திடுதே தொல்லை

---

6 கேள்வியினாலும் சுருதி யுக்தி யனுபவ ஹேதுக்களாலும், மாயாபுரியின் மீது வெறுப்பும் அழகாபுரியின் மீது விருப்புமுண்டாகி, அழகாபுரி மகத்வங்களை ஜீவாத்மன் வர்ணிக்கின்றான்.

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

எப்போதான் காண்பேனோ
இன்பசுகானந்த ஸ்தலம்
எப்போதான் காண்பேனோ

1 ஒப்பில்லாத் திருநகரி ஊர்த்தகதி யென்ற புரி
தப்பில்லா, நற்பரன் தனியரசிடுங்கதி— எப்.
2 பொன்னாவிலங்குபரி பூரணவானந்தபுரி
பொன்னார்ந்த தளவீதி பொற்பரனுலாவும் பதி— எப்.
3 கோடிரத்தி னத்தினொளி கேடிலாமுத்தர்கள் துதி
கொற்றவனே நற்றவமாய் தொலுவீற்றிருக்கும் பதி—எப்.
4 ஆரஞ்சி புஷ்பவனம் ஆனந்த உத்யாவனம்.
அபரஞ்சித் தங்கமயம் *அனந்தர பரமாலயம்— எய்.
5 பன்னிரண்டு வாசலுண்டு பானொளியாம் கற்களுண்டு
கண்ணையஞ்சனமுண்டு கனகாபிஷேகமுண்டு— எப்.
6 முத்திவைகுண்ட மோட்சம் நித்திய ஜீவக் †கழகம்
சுத்தியாம் ஜீவ விருட்சம் சித்திர ஜீவாற்றினோரம்— எப்.
7 பருதிமதியுடுக்களில்லை பகலிரவும் வருவதில்லை
சுருதி நிறை சூரியனும் சுந்தரமாய் ஜொலிப்பாராம்—எப்.
8 சத்தியந் தர்மம் விளையும் குத்திரம் பொய் கோள் நசியும்
நத்தும்பவவாசை குன்றும் நித்தியபே ரின்பமுண்டும்-எப்.
9 அம்பரனொளியியங்கும் கம்பலை நோய் பசி நீங்கும்
சம்ப்ரம பேரின்ப மோங்கும் சந்ததம் துதி விளங்கும்—எப்

---

* அனந்தரம்=மேல் † கழகம்=பயிலிடம்

7

2-ம் பரிச்சேதம்—கஷ்டபாகம்

ஜீவாத்மனின் யாத்திரை

கமாஸ் — ரூபகதாளம்

பல்லவி

நீடும்வழி கூடி வாருனே—வெகு
நேர்மையுடனேலோ காரணியந்தனில்
நீடும்வழி கூடிவாருனே

1 பாடி மகிழ்வுடனே முத்தி நாடித்தெளிவுடனே
வீடுபேறவேண்டிக் காடுமேலே தாண்டி
நீடும் வனந்தனில் நேர்வழியாய்க்கூடி— நீடும்.

2 தாகம் பசியெடுத்தும் சுகபோக வின்பந் தடுத்தும்
லோகாரண்யத்தில் வேகாமல் வெந்து
போகாமலோடிப் பிழைப்பதை நினைந்து— நீடும்.

3 பன்றிகள் யானை சிங்கம் தன்னைக் கொன்றிடுமென்றெ
குன்றிடாமல் மனம் நின்றிடாமல் வனம் [ண்ணுமல்
சென்றுபே ரின்பதேசமே நாட்டமாய்— நீடும்.

4 காட்டில் கரடி புலி எதிர் மாட்டிக்கொன்றாலும் சரி
நாட்டில் க்ஷணமேனும் நானிற்கமாட்டேனென்
றோட்டமா யோடி யொருநொடி நில்லாமல்— நீடும்.

5 சிற்றின்ப நுகர்ச்சிகள் ஐயோ வெற்றின்ப முயற்சிகள்
மற்றின்பமோ பேரின்ப மென்றுமுள
எத்தினமுமதை நத்தியே பத்தியாய்— நீடும்

திருடர் தோற்றம்

கலித்துறை

மண்பெண்பொனுசை யும்பேய்மா மிசமும் மதுலமும்
கண்போன்ற வான் மசத் ராதிகளென்னுங்கவி முறையே
திண்பூமிநாதன் கந்தப்பன் பொன்னப்பன் எனுந்திருடர்வழி
கண்ணின்றுடற்றுங் கலவறையாமுங் கவனிப்போமே

---

8 சிந்து

பூமிநாதன்சொல்

1 கந்தா! பொன்னு! யிங்குவாரும்—இதை
யோரும்—நன்ருய்த்
தேரும்—ஒருவன்
அந்தோ போகின்ருனே பாரும்—இவன்
தனியாகவே கனிவாகவே
இனிதாம் நகர் முனிவாகவே
யகின்ருனேயிது சமையம்—இதற்
கென்ன யோசனைகள் செய்வோம்.

பொன்னப்பன் சொல்

2 அன்புடனுரென்று கேட்போம்—ஊரைக்
கேட்போம்—பேரைக்
கேட்போம்—நம்மேல்
ஆசையுண்டோவென்று பார்ப்போம்—முக
வழகும் வடிவழகும் நடை
யழகும் மன வழகும் நமை
அல்லல் படுத்த தென்செய்வோம்—பெருங்
கல்லல் வந்தா லென்னசெய்வோம்—

கந்தப்பன் சொல்

3 என்ன வந்தாலென்ன வரட்டும்—ஒரு
பிரட்டும்—தரும்
உருட்டும்—போட்டால்
என் வசமாகுவான் விரட்டும்—வெகு
எடுப்பாகவே கடுப்பாகவே
தடுப்போம் உதைகொடுப்போம்—என்று
எல்லாருஞ் சேர்ந்துமே கூடி—வாரூர்
பொல்லாங்கு செய்யவே தேடி—

146978
0b-417
N12

9 திருடர் ஜீவாத்மனை வழிமறித்தெதிர்த்தல்

காம்போதி ஆதிதாளம்

பல்லவி

ஆரடா! உன்னூர் பேர் கூரடா!—இந்த
அடவிதனில் வருவ தடமோ மடமோ மூடா
ஆரடா! உன்னூர் பேர் கூரடா.

அனுபல்லவி

பாரடா! வொருகைவந்து சேரடா எம்மொடு, சண்டை
கூரடா வலாதுன்பொருள் போடடா அடடா மாடா—ஆரடா

சரணங்கள்

1 சொல்லு துணிகரமாய்க் கல்லு காடுள்ள வழி
செல்ல மதியுனக்கு இல்லையோ—அல்லாது வேறூர்
சொல்லையோ—நம்பியித்தனை
தொல்லையோ—அடே
தில்லுமுல்லாக வந்து, அல்லலுக்குள்ளகப்பட்டாய்
மல்லுக்கு வருகிறாயா சொல்லுக்குளடங்கிறாயா—ஆரடா

2 காட்டில் தனிமையாகத் தாட்டிகத்துடன் வந்து
மாட்டினையெம் வசமுனை வாட்டவோ,—தடியால்நின்னை
மாட்டவோ—புஜவல்லமை
காட்டவோ—கத்தி
தீட்டவோ பட்சிகட்கிரை யூட்டவோ அழலிற்போட்டு
மூட்டவோ யுன்னூர்க்குக்கம்பி நீட்டவோ எது சம்மதம்
[ஆரடா

3 ஆரென்றறியாமல் நீ யங்குமிங்கும் பார்க்கின்றாய்
பாராளும் துரைகள் யாம் பாரடா—மாயாபுரி ராஜர்
நேரடா—மோசம் வராது
காரடா—வழி
தடுத்தும் கடைவாய்ப் பல்லை யுடைத்தும் கம்புகள்
[கொண்டு
அடித்தும் ஜாடாவாய் வேலை முடித்தும்போடுவோம்
[மூடா—ஆரடா

10 ஜீவாத்மன் திருடனைக் கெஞ்சுதல்.

நவரோஜ் ஏகதாளம்

கண்ணிகள்

1 புண்ணியமுண்டாகும்--விடுத்தால்—புசமுமுங்களுக்கே
பண்ணிய தோஷங்க ளெண்ணவுங் கூடாதே
நண்ணிய பாவி நான் நன்னகரஞ் சேரச்
செய்யுங்கள்—செய்யுங்கள்
செய்ய கரத்தால் தீண்டிடாதெயும்— புண்ணிய.

2 அறிவேனுங்களையே-நன்றாய்த்-தெரிவேன் குணங்களையே
ஆசைகாட்டி மோசம்போக்கும்
பாச வெவ்வினைப் பாரி துரைமக்கள்
சங்காத்தம்—பங்கம் நித்தம்
சங்கடமென விங்குற்றேன்— புண்ணிய.

3 அழிந்து போகுமே—மாயாபுரி—கவிழ்ந்து போகுமுன்
அழிவில்லாத தாழ்வில்லாத
அழகாபுரியென்ற அம்பரன் பட்டணம்
ஏகின்றேன்—போகின்றேன்
என்னையே தடுக்காதிரும்— புண்ணிய.

4 வந்தனம் தந்தேன்—துரைகளே—வந்தனம் தந்தேன்.
எந்தனிடத்தில் உந்தன் கிருபை
இந்தத் தறியிலிருந்திடக் கோறினேன்
சுந்தரா—சுகந்தரா
சொந்த மாகினேன் ஏழை— புண்ணிய.

---

11 திருடர் சொல்

தோடி ரூபகதாளம்

பல்லவி

ஆரென்று மதித்தாய்—எமை
ஆரென்று மதித்தாய்—இந்த
அவனியாளும் ராஜரென்றெண்ணுமல்—ஆரென்று

அனுபல்லவி

பாரொன்றுமுய்யப் பரிபாலனஞ் செய்து
பாக்கியம் வளர்க்கும் யோக்கியராமெமை—ஆரென்

1 புண்ணியமுந் தவமும்—மடர்தனில்
போனல் காணலாமே—அடே
பண்ணிய பாவமும் நண்ணும் நரகமும்
கண்ணிய மோட்சமும் கண்டதார்! விண்டதார்!—
[ஆரென்

2 கடந்து பேசுகிறாய்—உன்னுவைக்
கத்திரித்துப் போடுவோம்—எங்கே
நடந்துபோவுந்தன் காலையொடிப்போமே
தொடர்ந்து மண்டை சிதறவடிப்போமே—ஆரென்.

3 எவர் சொல்லிக்கொடுத்தார்—இந்தப்பாடம்
எப்படிக் கற்றுக்கொண்டாய்—நமை
அவமதிக்கின்றாய் நவமணி நகர்
அழியுமென்கிறாய் பழிக்காளாகின்றாய்—ஆரென்

4 வஸ்திரத்தைக் கழற்றி—மகாஅ
வஸ்தைக்குள்ளாக்கி வைத்து—உனைக்
கஸ்திப்படுத்திக் குற்றுயிராக்கி
நஷ்டப்படுத்திவிட் டிஷ்டமாயகல்வோம்-ஆரென்

---

12 திருடர் கலகஞ்செய்தல்

காம்போதி ஆதிதாளம்

பல்லவி

1 ஓடிவாடா கந்தாவாடா, நாம் கூடியடிக்கலாம்
கூடியடிக்கலாம் ரூபாய் தேடி எடுக்கலாம்

2 போடு பொன்னு போடு ஒரு போடாய்ப் போடடா
போடாய்ப் போடடா நன்றாய்ப் பொறுக்கப் போடடா

3 அடே நில்லு எங்கள் சொல்லு அகலாதே எண்டாமல்லு
இதோ வருகுதடா கல்லு தகர்க்கணுமோ பல்லு

600 008

4 ரத்தம் சிந்த வடித்தோம் பொருள் அத்தனையும்பறித்தோம்
புத்தி வந்துதோடா சத்தம் போ[illegible]

5 பாரும்நன்றாய்ப்பாரும் பணம் யாதுமின்றிவாரும் ஆவி
சோரும்படியாக்கும் ஆடை சோமனையும் வாங்கும்.

---

13 ஜீவாத்மன் கெஞ்சுதல்.

காம்போதி ஆதிதாளம்

தரு

1 அடிக் காதேடா பாவி துடிக்குதென்னுவி
வடிக் காதே என் ரத்தம் பிடிக்காதே கழுத்தில்

2 நோகுதே என்மேனி போகுதே என்னுவி
வேகுதடா சோகம் ஆகுதடா கந்தா

3 பூமி நாதா நில்லு புகல் வேனோர் சொல்லு
சாமி கொல்லாதே தண்டிக்கச் சொல்லாதே

4 பொன்னப்பா என்னையா பொறுத்துக் கேளப்பா
என்னைப் பாதுகாராய் இரங்கிக் கண்பாராய்

---

14 திருடர் ஜீவாத்மனை குற்றுயிராய் விட்டகலல்.

பியாக் ஆதிதாளம்

பல்லவி

வாடா வீட்டிற்கேகவே—கந்தா
வாடா வீட்டிற்கேகவே

அனுபல்லவி

பாடாய்ப் படுத்தினது போதுமென் தம்பியோ
நாடான் ப்வரறிந்தால் கேடாய் முடியுமினி—வாடா

1 குற்றியிராக்கிவைத்தோம்—கந்தா
குரலு மடக்கிவிட்டோம்
செத்துப்போவதற்குமுன் சேர்வோம் நமது நகர்
எத்தால் பிழைத்தேகி யீடேறப் போகின்றான்— வா

2 புத்தி கற்பித்துவிட்டோம்—நல்ல
வஸ்திரம் பணம் எடுத்தோம்
இத்தரையின் ஜனங்கள் எல்லாரும் பார்த்து யிந்தப்
பித்தனை வெறுப்பர் நமைப் பின்பற்றுவாரே யினி-வாடா

---

15 நிர்க்கெதியாய் விடப்பட்ட ஜீவாத்மன் தெய்வத்தைப் பிரார்த்தித்தல்.

தீன சங்கராப்ரணம் ஆதிதாளம்

பல்லவி

தெய்வமே என்ன செய் குவேன்—ஐயோ

1 வையகம் யாவுமுன்றன் கையின் படைப்பல்லவோ
வெய்யவ ரடியேனை வேதனை செய்யலாமோ— தெய்.

2 பாழுலகிற் பிறந்து பரமகதி நினைந்து
மாளுமெளியனென்னை ஆள விதுசமையம்— தெய்.

3 தேடும் திரவியத்தைத் திருடருக்கே கொடுத்து
வாடி மயங்கு மென்னைக் கூடியாதரித்திடும்— தெய்.

4 தாகம் பசியுடற்ற ஆகமடியால் ரோக
காகம் வந்தெனைக்கொத்தக் காத்திருக்குதேசுற்றித்-தெய்.

---

16 ஜீவாத்மன் வீழ்ந்திருக்கும் வழியாய் சைவாகம சமயாக்ஷாரியார் வருகின்றார்

ஹிந்துஸ்தான்-தக்கடா ரூபகதாளம்

பல்லவி

1 சதுர்வேத சித்தாந்த சாஸ்திர சமயாக்ஷாரி
அதிவிணாவாய் வந்து தோன்றி னார் பார்—பார்
பதிபசுபாசமெனும் பக்குவ முதிர்ந்தவர்
கதிசுகவழியதைக் கண்டுமே தேர்ந்தவர்
சரியை கிரியை யோக சாதனை யறிந்தவர்
அரிதாம் ஞான அறிவினிற் சிறந்தவர்

2 கைதனில் ஜெபமாலே கழுத்தினிலுத்ராக்ஷம்
மெய்தனில் விளங்கிய விபூதியுடன்
செய்வீக தியானமே சிந்தையுடையோனெனத்
திசமும்பொற் காவியுடையுடனே
வைதிகமரபின் வரிசையைப் புகழ்ந்துமே
மைதான வெளியின் வழியாயெழுந்துமே.

---

17 ஜீவாத்மன் சமையாசாரிடம் விண்ணப்பித்தல்

கானடா — ஆதி தாளம்

பல்லவி

சாமி சரணம் தயவு செய்யும்

அனுபல்லவி

தாமிதஞ் செய்யாமல் தற்காத்துவிடும்— சாமி.

1 கள்ளரடித்துத் தள்ளினுரெனை
வள்ளலே வந்து மெள்ளத் தூக்கிடும்— சாமி.

2 ஆவி போகுதே தாகமாகுதே
தாவி வாருமேன் பாவி கெஞ்சுறேன்— சாமி.

3 குற்றுயிரானேன் சற்றே வாருமேன்
பெற்ற பிதாவே உற்ற சமயம்— சாமி.

4 காய வேதனை கண்டும் எந்தனை
மாயவிடுவ தந்யாயம் ஐயா— சாமி.

---

18 ஆசூஷாரியார் பிரதியுத்தரம்

தன்யாசி — ஆதிதாளம்

பல்லவி

இன் ஞரென்றறியாம லிறைகின்றுயொருக்கால்
சொன்னல் தெரியாதோடா—போடா.

அனுபல்லவி

எந்நாளில் எம்போல்வார் உன்னைப்போன்றவருக்கு
இன்னுவுறுங்காலம் இரங்கியுதவி செய்தார்—இன்னு

சரணங்கள்

1 நம்முடையோக்கியதை நன்றாயறியாத
நிர்முட நிரக்ஷரனே
இம்மாத்திரமேனுமிரங்கிக் கிருபைசெய்ய
எங்கள் குலத்தவனே
சும்மாவாகிலும் பார்க்கச் சூத்திரனாய்த்தோன்றாய்
அம்மாவோர்க்ஷணமேனும் அணுகினாலுந் தோஷம்—இன்.

2 தக்கப்படியுதவி செய்யாமல் தூக்காமல்
பக்கமாய் விலகிப்போவேன்
திக்கற்ற பிரேதம்போல் செத்தாலுமெனக்கென்ன
திரும்பிப்பாராது போவேன்.
எக்காலத்திலு மெங்களுறவுடையோர்
இக்காலத்திலு மெவர்க்குமுதவமாட்டார்— இ.

3 எல்லாருமேகு மார்க்கம் எதுவெனவறியாமல்
எனிங்கே வந்தாயடா
செல்லும் விஸ்தார ராஜ பாதை இதோ அந்தண்டை
திறந்திருக்குதே மூடா
கள்வர் கடும்பயமும் கணத்ததோரிடுக்கமும்
புல்லும் புதருமுள்ள புதுவழிபோவென்றதார்—இன்னு

---

19 ஜீவாத்மன்துயருறல்

செஞ்சுருட்டி | ரூபகதாளம்

பல்லவி

எந்தன் துயரம் வந்து பாரும்—நிர்ப்
பந்த பாவி சாகின்றேன்—தேவா

அனுபல்லவி

மைந்தனல்லோ இவ்வனந்தனில்
வந்தேனே தவிக் கின்றேனே—எந்தன்

சரணங்கள்

1 என்னசெய்குவேன் அன்னாகாரம்
ஏதுமில்லையே ஐயையோ
மன்னு நாவும் வறளுதே சாமி
என்னுவியும் எகுதே—தேவா—எந்தன்

2 கள்ளர் வந்திந்தக் கதியிலாக்கினர்
கால்கரத்தையுங் கண்டித்துவிட்டார்
தவ்விவிடிலோ தாரகமில்லை
சுவாமி தயை சேமி—தேவா—எந்தன்

3 பெற்றார் உடன்பிறந்தார்—தமர்
பெண்டீர் மக்கள் பிரியர்
உற்றாருமில்லையே நீயே
நற்றுணையடைந்தேன்—தேவா—எந்தன்

---

20 லோகானந்தர் வருகின்றார்

"வானின்று வந்த எம்மானே" என்ற வர்ணமெட்டு

ஹிந்துஸ்தான் பியாக் அடதாளச் சாப்பு

பல்லவி

ஆனந்தமாகவே யவ்வனந் தன்னில் லோ
கானந்தர்வந்தனரே—ம கானந்த மாகவே

அனுபல்லவி

பா † னந்தும் போக ‡ மருந்தம் அருந்துஞ்சு
கானந்த மந்திரனும்—ம கானந்த

சரணங்கள்

1 ஞாலந்தனில் நம்மைப்போலொரு ஞானி
ஞாபகமுண்டோ சொல்வீர்—இப்போ

---

† நந்தும்=கெடும்.
‡ மருந்தம்=விஷம்.

* நாலல்தரும் யோகபாகைவரும் ஞான
மூர்த்தி நானென்றுசொல்லி—ம கானந்த

2 சிற்றின்பம் வெற்றின்பம் என்ற கற்றுமவர்
கற்றறி மூடர்களாம்—நல்ல
மற்ற பேரின்பம் வருவது சிற்றின்பம்
மாரீபமாக வேதான்—மகானந்த

3 எல்லாவித சுகம் ஏதேதுண்டோ அ
தெல்லாம் விரும்பிடுவீர்—எங்கள்
அல்லாவின் தீர்க்கத்தரிசி மகம்மது
சொல்லியிருக்கிறுரே—மகானந்த

4 சப்பரமஞ்சமீது சல்லாபலீலாவி
னோதமே முத்திநலம்—அப்போ
சுப்பரதேகம் சுயம் பான தங்கமய
சுகமேயனுபவிக்கும்—ம கானந்த

---

21 ஜீவாத்மன் பிரார்த்தித்தல்

ஹிந்துஸ்தான் பியாகு ரூபகம்

பல்லவி

துரையே வந்தனம்—லோ கானந்த
துரையே வந்தனம்—தந்தேன்

அனுபல்லவி

மறைகளோதிடும் மதிவலானே எம் குறையை நீக்கிடும்
—லோகானந்த

சரணங்கள்

1 அங்கமே புண்ணுய்ப்போச்சுதே—என்
தங்கமே நீர்வர வாய்ச்சுதே—என்
சங்கடம் யாவும் தீரும்—துரையே
இங்கெனையே கண்பாரும்—காரும்
எங்கும் பிரபல்ய மங்காத கீர்த்தி—சங்கையுமுண்டாகும்
—லோகானந்த

---

* நாலல்=தாழ்வு.

2 திருடர்மூவரடித்தார்—எந்தன்
பொருளனைத்தையும் எடுத்தார்— ஐயோ
வருதுயர்விடுத்தார்—என்னைப்
பருவரல்படுத்தார்—தடுத்தார்
ஒருவருதவியில்லையே-ஐயையோ-அருள்புரிகுவாய்—லோகானந்

22 லோகானந்தர் பிரதியுத்தரம்

ஹிந்துஸ்தான் தோடி — ஆதிதாளம்

தரு

1 துணையே துணையே என்று தொந்தரவு செய்கின்றாய்
தூர்த்தா தமிழா போடா
வளைபோலிலங்குமெங்கள் மார்க்கத்தைச்சேர்ந்தவனா!
பிறைபோல் மயங்கும்பேய் மார்க்கத்தைச்சேர்ந்தவனா!
[—துணை

2 அரியமுயற்சியாக அவசரஜோலியாக
அதிவிரைவாகச் செல்கின்றேன்
தரித்துநின்றுதவிடத் ததியிதுவோமூடா
மறுத்துமெனையேகேட்க மதியில்லையோபோடா

3 நான்வந்துதவிசெய்ய நியாயமாகுமா சொல்லு
நாயேபேயே கத்தாதே
கானிலவதிப்பட்டுக் கதறினுமெனக்கென்ன
தானேஎன்வழியேகி றேனேசத்தமிடாதே

23 ஜீவாத்மன் பிரலாபிக்கின்றான்

மத்தியமாவதி — ரூபகம்

பல்லவி

ஆருங்காணேனே—ஆயாசம்
அதிகமாகின்றதே—ஐயையோ

சரணங்கள்

1 தேறும்படிக்கென்ன கூறிடினுங்—காயம்
ஆறும்படிசெய்வார்யார்?—தாகம்
தீரும்படிசெய்வார்யார்?—வீடு
சேரும்படிசெய்வார்யார்?—இந்தவேளை— ஆருங்.

2 படியினிற்காயம் எடுத்தபலனிதோ
அடியினால்தவித்து—ரத்தம்
வடியுதேதுடித்து—ஆவி
முடியுதேபதைத்து—இந்தவழைக்— காருங்

3 இக்கற்றபேர்க்குத் தெய்வம்தஞ்சமெனுஞ்சொல்
தீர்க்கமற்றுப்போச்சே—இது
பக்கமெல்லாம்பேச்சே—மனு
மக்கட்கெல்லாம் எச்சே—ஐயையோ— ஆருங்

24

ஆறுதல் பாகம்.

3-ம்பரிச்சேதம்

கருணாலயன் வருகின்றார்.

வெண்பா

அன்புமலர்முகத்தோன் ஆரணச்செவ்வாயுடையோன்
இன்பம்பொழியுமிருகரத்தோன்—அம்புவியில்
சுந்தரன் சுத்தன் சுகுணன் துரந்தாணுய்
வந்தனன் அந்தவனம்

("சிந்தாசனுவென்ற" கீதம்போல்)

பல்லவி

அருணோதயம் அவிர்பிரகாசம்
இருளாசமே இயற்றும்விதம்
கருணாலயன் அக்கானகத்தில்
தினகரன்போல் தேஜசுடனே
பரிமீதேறி வருகின்றானே

அநுபல்லவி

அருளுருவாய் மருளறவே
சுருதிநூல்வல்லோன் நல்—சொற்சுகத்தான்
உறுதிபெற்றுயர்ந்தோன்—சிற்சுகத்தான்— அருளே.

1 அன்பின்தயாளன் நம்புங்குணலன்
துன்பமுறுவோர்க்—குதவுதோழன்
தன்பிறனைத் தன்னைப்போன்று
இன்பமுறநே—சிக்கும் நேர்மையான்— அருளே.

2 நிர்மலஞானம் பார்க்குளஞ்ஞானம்
நியாயவாதம் செயில்—ஊர்விரோதம்
இருப்பனபோல்—விருப்பும்வெறுப்பும்
இருந்தாலுமொன்றுக்கு—மஞ்சாநெஞ்சன்— அருளே

---

25 ஜீவாத்மன் படுமேவஸ்தையைக் கண்ணுறும் கருணாலயன் வலியப்போய் வினவுகின்றான்.

ஹிந்துஸ்தான் தோடி திரிபுடை.

எங்கன்செவியிலழுகையின்குரலந்தோகேட்குதே—இந்தோ
சிந்தைமகிழ்ந்துமே யிந்தவேளையி லெழுந்துசெல்கின்றேன்
மைந்தனேஇந்த யிடந்தனில்வந்தது எந்த முகாந்திரமாய்ச்
சுந்தரமுகனே அந்தரங்கத்தையு மறைகுவாயெந்தனிடம்
தந்திரமந்திரஇந்திரஜாலத் தடந்தனில்வீழ்ந்தாயோ
தங்கியேநீயு மங்குநில்லாதே இங்கேவா கண்மணியே
இங்கேவா கண்மணியே இங்கேவா கண்மணியே,
இங்கேவா கண்மணியே.

---

26 கருணாலயன்சொல்.

சஹானா ஆதிதாளம்.

தரு

1 ஆரண்யந்தனில்வந்து அகதியைப்போலநொந்து
அவதிப்படநேர்ந்ததோ மகனே மகனே ஐயோ

ஜீவாத்மன் சொல்

2 சரணம் சரணம்ஐயா தமியேன் உன்னடைக்கலம்
மாணமுறுஞ்சமையம் வந்துதவினீர்ஸ்வாமி
3 அழிவினகரைவிட்டு அழகாபுரியைத்தொட்டு
வழியாக வந்தவென்னைப் பழிசெய்தார் கள்வர்ஸ்வாமி

கருணாலயன் சொல்

4 சத்ராதிகள்வந்துனைச் சதிசெய்துபோனர்பினை
மித்ரா பயப்படாதே சத்திரம்கொண்டுசேர்ப்பேன்
5 காயங்களையாற்றுறேன் கால்கைகளைக்கட்டுறேன்
வாயில்போஜனந்தாரேன் தாகம்தணிந்துகொள்ளேன்
6 எண்ணெ இதோபூசுறேன் கண்ணைத்திறந்துபாரேன்
மண்ணைத்துடைத்திடுறேன் புண்ணைக் கழுவுகிறேன்
7 மாகனமாகவுன்னை மகிழ்வுடனேயெந்தன்
வாகனமதிலேற்ற வருவாய் பயப்படாதே
8 மார்பிலணைத்துக்கொண்டு ஆதரவாகக்கொண்டு [டு
பார்ப்பேன் என்மனங்கொண்டு காப்பேனுண்டவனுண்
9 சத்திரந்தனில்வந்தோம் பத்திரமாயிரங்கும்
இத்தின முன்னேடு நாம் இருந்து மறுநாள் போவோம்

27 கருணாலயன்ஜீவாத்மனை சத்திரத்ததிபதியிடம் ஒப்புவித்தகலல்.

காப்பி ஆதிதாளம்

பல்லவி

போய்வாரேன் சுக மாயிருப்பீர்

சரணங்கள்

1 சத்திரத்ததிபதியே பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்-போய்
2 ஒப்பிவித்தமைந்தனைநீர்செப்பமுடன்காத்துக்கொள்ளும்போ
3 சத்திராதிகள்வந்து குத்திரஞ்செயாதுகாப்பீர்— போய்
4 ரண்டுபணம்தாரேன் வேண்டும்செலவுசெய்ய— போய்
5 அதிகம்செலவுசெய்தால் பதியலாமென்கணக்கில்— போய்

6 ஒன்றும்குறைவராமல் நன்றாய்விசாரித்திடும்— போய்.
7 திரும்பிவருவேன்பணம் விரும்பித்தருவேன் பத்ரம்-போய்.
8 எப்போதும்உம்நினைவோடிருப்பேன்விழித்திருங்கள்-போய்.
9 வாக்குத்தத்தம்தப்பாமல் சீக்கிரமாய்வருவேன்— போய்.

28

சத்திரம்

4-ம் பரிச்சேதம்

போதனுபாகம்

சங்கராபரணம் *ஆதிதாளம்*

பல்லவி

சத்திரத்தின் சிங்காரம் தினமனோகரம்—இந்தச்
சத்திரத்தின் சிங்காரம்

சரணங்கள்

1 பக்தியுள்ளோரின்வீடு நித்தியசங்கீதமேடு
முக்தியைப்பயக்கும்பீடு சித்தியாமதனிற்கூடு— சிங்.
2 பாவிகள்காயப்பட்டோர் பாரஞ்சுமந்திளைப்போர்
மேவியிவிடம்வரில் மேலாஞ்சுகம்பெறுவர்— சிங்.
3 ஈனப்பாவியெவரும் ஞானதீட்சைபெறுவர்
தீனதயாள்கிறிஸ்தின் திருவிருந்தருந்துவர்— சிங்.
4 சுத்தவான்களின்ரத்தம் சத்திரத்துக்குவித்தாம்
இத்தரையோர்க்குமுத்தாம் பெற்றோர்ஜீவமுத்தராம்-சிங்.
5 ஆட்டுக்குட்டி ரத்தத்தில் அங்கி துவைப்போருண்டு
மீட்டின் கெம்பீரஸ்துதி விளங்குமரட்சண்யமுண்டு-சிங்.
6 ரத்தத்தைச்சிந்தி இந்த சத்திரத்தைஸ்தாபித்த
அத்தன்கிறிஸ்தினுவி நித்தமுலாவுமிந்த— சிங்.
7 சிலனோர்நியமித்த சிலாக்கியங்கள்ரண்டுண்டு
ஜீவனுண்டுவேதாந்த ஞானோபதேசமுண்டு— சிங்.
8 ஆயர்குருக்கள்ஜெப ஆலயங்களுமுண்டு
ஓய்வுநாளுபவாசம் ஸ்தோத்ரகீதங்களுண்டு— சிங்.
9 அன்புநம்பிக்கையுண்டு அரியவிஸ் வாசமுண்டு
அன்புக்குவிரோதஞ்செய்வோரடையும்நித்தியபங்குண்டு
—சிங்.

---

29 வேதாகம சம்பந்த திருவுளா

'நீயும் போய் அந்தப்படி செய்.'

நாதநாமக்கிரியை, ஆதிதாளம்

பல்லவி

திருவாய் மொழிந்த வாக்யம்—படி நடந்தால்
தருவார் நித்ய பாக்யம்— ஐயன்திரு

சரணங்கள்

1 அருமைக்கிறிஸ்தரசன் அவனியில் சற்குருவாய்
அவதரித்திட்ட காலே— ஓர் நாள்
மறுமையைப்பற்றிக் கேட்ட மனுஷனுக்காக நேரில்
அறைந்த கட்டளே வாக்யம்— ஐயன்திரு.

2 தன்னைப்போல் தன் பிறனைத் தக்க பூரணவனு
தாபத்துடனே நேசித்தால்—அப்போ
பொன்னவிர் பேரின்ப பெருமை கிடைக்கும் நீயும்
போயந்தப்படி செய் என்றார்— ஐயன் திரு.

3 தற்சிநேக மகற்றித்தன்னை மிக வொறுத்துச்
சகலத்திராளி லன்பு—வைத்துத்
தன்னாலியன்ற மட்டும் தருமம் செய்வதே யுக்தித்
தருபலனடைவர் முக்தி— ஐயன் திரு.

4 கூடிய யாவரையும் குறைவு மேன்மை கூறாமல்
கொடுத்த வயது வரையும்—நீ
நீடியதோர் நன்மை நித்தமும் காத்து வந்தால்
நீடூழி யின்பமுண்டு— ஐயன்திரு.

5 கிறிஸ்தவனே நீ கிறிஸ்தவனுக் கேற்க
கிரமமாக நடந்தால்—உன்னைக்
குறித்த காலந்தன்னில் கொற்றவனேசுனைக்
கூட்டிச் சேர்ப்பார் மடியில்— ஐயன் திரு.

6 அன்பு குறைந்து போச்சு ஆகாத மாய்மால
வம்புகள் செய்யாதீர்—மேலாம்
இன்ப சுகம் விரும்பில் அன்பின் நாதனை யண்டித்
திரும்பிக் குணப்படுவீர் ஐயன்திரு.

30 அன்பின் மகத்வம்.

ஆவணக்காப்பக ... சென்னை 600

ஆனந்த பைரவி ரூபகதாளம்

பல்லவி

அன்பின் மகத்துவ மென் சொல்வேன்
கண்ணே சொல்வேன்

அனுபல்லவி

என்பின் எழுந்துவாவேன் இன்பஞ் சுரக்குஞ்சொன்னேன்—

சரணங்கள்

1 ஆதியந்த மிலாதவ னுதிவஸ்து அன்பு
ஆதியிலே யிருந்த வார்த்தையும் அன்பு
அண்ட சராசரங்கள் அமைத்தது மன்பு
மண்விண்ணுடு சூரியன் மதியமைத்தது மன்பு
தண்கடல் தீ ஐம்பூதம் தந்ததுவுமன்பே — அன்.

2 ஒன்று மிலாதினின்று உலகைச் செய்தது மன்பே
ஊர்வன பறப்பன உயிர்கள் தந்தது மன்பே
துன்று பயிர் விருட்சம் தின்னும் தானிய மன்பே
துலங்கு மிருகாதிகள் தோன்றச் செய்தது மன்பே
உயர்ந்த ஜீவாத்ம கோடி உண்டு செய்ததுமன்பே—அன்.

3 நன்மை தீமையறிய ஞானம் தந்தது மன்பாம்
நன்றுயிருக்க வேதேன் நல மீய்ந்தது மன்பாம்
நால்வகைச் சுகுணங்கள் நல்கினது மன்பாம்
பாழுலகையைச் சார்ந்தும் பாராட்டினது மன்பாம்
மாது வித்தாகி நிலம் வருவேனென்றது மன்பாம்— அன்

4 அன்பே கன்னி வயிற்றி லவதரித்த சற் குரு
அன்பே புல்லணையினி லமர்ந்த திருவுரு
அன்பே யுன்த வாழ்வை யகற்றி வந்தது பூமி
அன்பே அற்புதவடை யாளம் புரிந்த ஸ்வாமி
அன்பே பெருக்கமாகி ஆருயிரளித்த யேசு— அன்

5 ஆத்ம சரீரப்பாடு அடைந்தது மன்பு
காத்திர தேகிகளால் கஸ்திப்பட்டது மன்பு
சத்ராதிப்பாவி கண்மேற் சித்தம் வைத்தது மன்பு
இத்தரா யுய்யத்திரு ரத்தஞ் சிந்தின தன்பு
பித்தனெனப்பேர் சொல்லப் பிரியங்கொண்டதுமன்பு— [அன்.

6 அன்பே சிலுவை யிலறையப்பட்டது வே
அன்பே மனுடருக்கா வுயிர் கொடுத்ததுவே
அன்பே அடங்கி மூன்றிலாவி பெற்றதுவே
அன்பே பரமா ரோ கணமானதுவே
அன்பே தம்மன் பருக்காய்ப் பரிந்து பேசிடுதே— அன்.

7 அன்பே வருட் சுருதி அன்பே மனவுறுதி
அன்பே சுத்த வேதாந்தம் அன்பே பரமானந்தம்
அன்பே பரம வஸ்து அன்பே பரம குரு
அன்பே நித்திய வழி அன்பே பேரின்ப கதி
அன்பே யழியாச் செல்வம் அன்பே சருவமயம்— அன்.

8 அன்பு நீடிய சாந்தம் அடக்கம் தயவுளது
அன்பு பொறாமைப்படா தற்புகழ்ச்சி விரும்பா
தன்பிறு மாப்படையா தயோக்கியதை விரும்பா
தன்புதற் பொழிவை யகற்றுஞ் சினமடையா
தன்பு தீங்கு நினையா நியாய சந்தோஷப்படும்— அன்.

9 அன்பு சகலத்தையுந் தாங்கும் விசுவாசிக்கும்
அன்பு எல்லாவற்றையும் நம்பும் சகித்துக்கொள்ளும்
அன்புக்கு அழிவில்லை அறிவெல்லாமோய்ந்து போம்
அன்பு நிறைவுள்ளது அறிவுக்கெட்டாதது
அன்பு விஸ்வாசம் நம்பிக்கையிலும் பெரியது— அன்.

வர்னம் . கன்னலஞ்சுவை கனிந்த செந்தமிழ்
சொன்னலஞ்சுகம் நன்னிலம் பெறச்
சொன்னவன் சிகாமணி தாசன் அன்பாய்த்
துதித்திடு மீசன் கிறிஸ்து ராஜன்— அன்.

31

மங்களம்.

செஞ்சுருட்டி. ஆதிதாளம்

பல்லவி

யேசு மகராஜனுக்கு ஜெயமங்களம்— எங்கள்
துணை யேசுராஜனுக்குச் சுபமங்களம்.

அனுபல்லவி

மறைமுடிவாகி நிற்கும் மனுடவதாரனுக்கு— யேசு

சரணங்கள்

1 ஆதியந்த மிலாத வனாதி நித்திய வஸ்து
மாதுயனை மாமரி மகன் கிறிஸ்து— யேசு

2 நீதியிரக்க பவ ரஹித மகாப்பிரபூ
கோதற்ற வெண்குணத்தான் கொற்றவன்— யேசு

3 ரத்தப் பரிசம் போட்ட கர்த்தன் கிறிஸ்து வேட்ட
சித்ரத் திருச்சபையின் தேட்டாளன்— யேசு

4 உடுக்களெலா முதிரப்படு பாவிகளெழும்ப
நடுத்தீர்ப்புச் செய்யவரும் நாயகன்— யேசு

5 மண்ணுலகத்திலுள்ள மா விசுவாசிகளைப்
பொன்னுலகஞ் சேர்ப்பிக்கும் புண்ணியன்— யேசு

6 பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்
சதா நீடூழிகால மங்களம்— யேசு

7 படிப்பவர் கேட்பவர் பஜனைகள் செய்பவர்
அடியவர் யாவர்க்கு மங்களம்.

கலிவிருத்தம்

வான பரனொரு மகவன்றிசைத்திடு
மான நல சமாரியன் காதையை
தேனுறைப் பாவாய் செயவருள் தந்திடும்
ஞான நாயகன் நாமம் வாழியவே.

கருணாலயன் முற்றிற்று.

C. M. S. Press, Palamcottah—1911

பிரதிகள்.—இடையன்குடியிலிருக்கும் எஸ். பி. ஜி. மிஷன் விசாரணை குருவாகிய ரெவரெண்டு ஜி. எட்ச்லாம் ஐயரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.